## தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

காந்தி மண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை – 600 025.

### சுற்றறிக்கை

### கணிதத் திறன் தேர்வு மற்றும்
### அறிவியல் திறன் தேர்வு – 2026

*****

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை – மாவட்ட அளவிலான கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு – 2026 – தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு (State Board Government Schools only) மற்றும் தனியார் பள்ளிகளில் (Including State Board Government Aided schools, Matric, CBSE, ICSE, KV schools) 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக நடத்துதல் – தொடர்பாக.

*****

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழக அரசால் 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தன்னாட்சி நிறுவனமாகும். இம்மையம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் கீழ் சென்னை – பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், திருச்சிராப்பள்ளி – அண்ணா அறிவியல் மையம் (கோளரங்கம்), வேலூர் – டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம் மற்றும் கோயம்புத்தூர் – மண்டல அறிவியல் மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்களின் முக்கிய நோக்கம் பொதுமக்களிடையே, குறிப்பாக மாணவர்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அறிவியல் மனப்பான்மை மற்றும் புதுமைச் சிந்தனையை வளர்ப்பதுமாகும். இதன் ஒரு பகுதியாக, மாணவர்களின் அறிவியல் மற்றும் கணிதத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் பல்வேறு போட்டிகள், திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் திறன் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

CamScanner

இந்தாண்டு-2026 மாணவர்களின் கணிதத்திறன் மற்றும் அறிவியல் திறன் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட அளவிலான கணிதத்திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு (State Board Government Schools only) மற்றும் தனியார் பள்ளிகளில் (Including State Board Government Aided schools, Matric, CBSE, ICSE, KV schools) 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்இத்தேர்வுகளில் பங்கேற்கலாம்.

1. <u>கணிதத் திறன் தேர்வு விவரங்கள்</u>

- தேர்வு நாள்: 04.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)
- தேர்வு நேரம்: காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை
- தேர்வு முறை: நேரடி (Offline)
- விண்ணப்ப பதிவு தொடங்கும் நாள்: 01.08.2026
- விண்ணப்பிக்க கடைசி நாள்: 10.09.2026
- வினா வகை:கொள்குறி (Objective Type)
- வினாக்களின் எண்ணிக்கை: 100(No Negative Marks)
- 6ஆம் வகுப்பு, 7ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தனித்தனியான வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வகுப்பிற்கும் கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்விற்கான வினாத்தாள்கள் அந்தந்த வகுப்பிற்குரிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.
- கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு ஆகிய இரண்டிற்கும், அரசு பள்ளி(State Board Government Schools only) மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் (Including State Board Government Aided schools, Matric, CBSE, ICSE, KV Schools) அனைவருக்கும் ஒரே வினாத்தாள் (Common Question Paper) வழங்கப்படும். இருப்பினும், பரிசுகள் அரசு பள்ளி, மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு தனித்தனி பிரிவுகளின் அடிப்படையில் வழங்கப்படும்.
- தேர்வு மொழிகள்: தமிழ் மற்றும் ஆங்கிலம்
- தேர்வு மையம்: ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவிக்கப்படும் தேர்வு மையங்கள்

CamScanner

- தேர்வில் OMR (Optical Mark Recognition) விடைத்தாள் பயன்படுத்தப்படும்.
- மாணவர்கள் நீலம் அல்லது கருப்பு நிற பால் பாயிண்ட் பேனா (Blue/Black Ball Point Pen) பயன்படுத்தி மட்டுமே OMR விடைத்தாளில் பதில்களைக் குறிக்க வேண்டும்.
- பென்சில், ஜெல் பேனா அல்லது பிற வகை பேனாக்களைப் பயன்படுத்தி பதில்களைக் குறிக்க அனுமதிக்கப்படமாட்டாது.
- தவறான பதில்களுக்கு எதிர்மறை மதிப்பெண்கள் (Negative Marks) வழங்கப்படமாட்டாது

2. <u>கணிதத் திறன் தேர்விற்கான பாடத்திட்டம்</u>

மாநிலப் பாடத்திட்டம் (State Board) மற்றும் சி.பி.எஸ்.இ. (CBSE) பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் அமைக்கப்படும்.

பாடப்பிரிவுகள் (குறிப்பாக):

- அடிப்படை கணிதம் (Basic Mathematics)
- Arithmetic (எண்கணிதம்)
- Logical Reasoning
- Fractions (பின்னங்கள்)
- Decimals
- Percentage
- Ratio and Proportion
- Mensuration (அளவியல்)
- Algebra (இயற்கணிதம்)
- Geometry (வடிவியல்)
- Sequence and Series
- Data Interpretation
- எண் வடிவங்கள், கணிதப் புதிர்கள் மற்றும் தொடர்புடைய பிற கணிதங்கள்.
- அன்றாட வாழ்வில் கணிதம்.

CamScanner

3. <u>அறிவியல் திறன் தேர்வு விவரங்கள்</u>

- தேர்வு நாள்: 11.10.2026 (ஞாயிற்றுக்கிழமை)
- தேர்வு நேரம்:காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 மணி வரை
- தேர்வு முறை:நேரடி (Offline)
- விண்ணப்ப பதிவு தொடங்கும் நாள்: 01.08.2026
- விண்ணப்பிக்க கடைசி நாள்: 10.09.2026
- வினா வகை:கொள்குறி (Objective Type)
- வினாக்களின் எண்ணிக்கை: 100(No Negative Marks)
- 6ஆம் வகுப்பு, 7ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தனித்தனியான வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு வகுப்பிற்கும் கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்விற்கான வினாத்தாள்கள் அந்தந்த வகுப்பிற்குரிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.
- கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு ஆகிய இரண்டிற்கும், அரசு பள்ளி (State Board Government Schools only) மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் (Including State Board Government Aided Schools, Matric, CBSE, ICSE, KV Schools) அனைவருக்கும் ஒரே வினாத்தாள் (Common Question Paper) வழங்கப்படும். இருப்பினும், பரிசுகள் அரசு பள்ளி, மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு தனித்தனி பிரிவுக்ளின் அடிப்படையில் வழங்கப்படும்.
- தேர்வு மொழிகள்: தமிழ் மற்றும் ஆங்கிலம்
- தேர்வு மையம்: ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவிக்கப்படும் தேர்வு மையங்கள்
- தேர்வில்OMR (Optical Mark Recognition) விடைத்தாள்பயன்படுத்தப்படும்.
- மாணவர்கள் நீலம் அல்லது கருப்பு நிற பால் பாயிண்ட் பேனா (Blue/Black Ball Point Pen)பயன்படுத்தி மட்டுமே OMR விடைத்தாளில் பதில்களைக் குறிக்க வேண்டும்.
- பென்சில், ஜெல் பேனா அல்லது பிற வகை பேனாக்களைப் பயன்படுத்தி பதில்களைக் குறிக்க அனுமதிக்கப்படமாட்டாது
- தவறான பதில்களுக்கு எதிர்மறை மதிப்பெண்கள் (Negative Marks) வழங்கப்படமாட்டாது.

CS CamScanner

4. <u>அறிவியல் திறன் தேர்விற்கான பாடத்திட்டம்</u>

மாநிலப் பாடத்திட்டம் (State Board) மற்றும் சி.பி.எஸ்.இ. (CBSE) பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் தலைப்புகளில் அடிப்படை அறிவியல் சார்ந்த வினாக்கள் இடம்பெறும்.

- இயற்பியல் (Physics)
- வேதியியல் (Chemistry)
- உயிரியல் (Biology)
- சுற்றுச்சூழல் அறிவியல்
- அன்றாட வாழ்வில் அறிவியல்
- அறிவியல் பயன்பாடுகள்
- அடிப்படை அறிவியல் கருத்துகள்
- உடல் அறிவியல், வீட்டில் அறிவியல்

பதிவு விவரங்கள்

- மாணவர்கள் ஆன்லைன் மூலம் மட்டுமே பதிவு செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு தேர்விற்கான விண்ணப்பக் கட்டணம்ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்).
- இரண்டு தேர்வுகளிலும் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் ஒவ்வொரு தேர்விற்கும் தனித்தனியாக விண்ணப்பித்து, அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.
- தேர்வுக் கட்டணத்தை ஆன்லைன் மூலமாக மட்டுமே செலுத்த வேண்டும்.
- நேரடியாகவோ அல்லது வேறு எந்த முறையிலோ கட்டணம் பெறப்படமாட்டாது.
- தேர்வுக் கட்டணத்தை செலுத்துவதற்கான QR குறியீடு (QR Code) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்விற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்ப பதிவு தொடங்கும் நாள் 01.08.2026 ஆகும்
- கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்விற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள் 10.09.2026 ஆகும்

CS CamScanner

5. <u>பரிசு விவரங்கள்</u>

- மாவட்ட அளவில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் அரசு பள்ளி மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.
- 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிற்கும், கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு ஆகியவற்றில் அரசு பள்ளி (State Board Government Schools only) மற்றும் தனியார் பள்ளி (Including State Board Government Aided Schools, Matric, CBSE, ICSE, KV Schools) மாணவர்களுக்கு தனித்தனி பிரிவுகளாக மதிப்பீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு பிரிவிற்கும் (Category wise) தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

6. <u>ஒவ்வொரு பிரிவிற்கும் வழங்கப்படும் பரிசுகள்:</u>

<u>முதல் பரிசு</u>

- ஒரு மாணவருக்கு ரூ.3,000/-

<u>இரண்டாம் பரிசு</u>

- இரண்டு மாணவர்களுக்கு தலா ரூ.2,000/-

<u>மூன்றாம் பரிசு</u>

- மூன்று மாணவர்களுக்கு தலா ரூ.1,000/-

<u>நான்காம் பரிசு</u>

- ஐந்து மாணவர்களுக்கு தலா ரூ.500/-

மேற்கண்ட பரிசுகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களுக்கு தனித்தனியாக வழங்கப்படும். அதிகப்படியான மாணவர்கள் ஒரே மதிப்பெண்கள் பெற்றால் மேற்கூறிய பரிசுத்தொகை மாணவர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

CamScanner

7. தேர்வு முடிவுகள்

கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு ஆகிய இரண்டிற்குமான தேர்வு முடிவுகள் 2027 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இரண்டாவது வாரத்தில் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும்

எனவே, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் தங்கள் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இத்தகவலை தெரிவித்து, அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் இத்தேர்வுகளில் பங்கேற்க ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாணவர்கள் தங்களின் கணித மற்றும் அறிவியல் திறன்களை வெளிப்படுத்தும் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி மாவட்ட அளவிலான இத்தேர்வுகளில் ஆர்வமுடன் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் விவரங்கள், ஆன்லைன் பதிவு மற்றும் தேர்வு தொடர்பான தகவல்களுக்குஇணையதளம்:www.tnstc.tn.gov.in

கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு தொடர்பான சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இம்மைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் கைபேசி எண்கள் பின்வருமாறு: (தொடர்பு கொள்ள வேண்டிய நாள் மற்றும் நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை) (திங்கள் முதல் சனிக்கிழமை வரை)

| | | |
|---|---|---|
| 1. | திருமதி கி. கோமதி, கோளரங்கப் பொறியாளர் | 94863 41068 |
| 2. | திரு. கோ. சுடலை, வழிநடத்தும் விரிவுரையாளர் (தே.நி) | 77089 42872 |
| 3. | திருமதி ஜெ. துர்காபவானி, அறிவியல் உதவியாளர் நிலை–II (தே.நி) | 98419 29435 |
| 4. | திரு. வி, வினோத்குமார், காட்சிக்கூட போதகர் (தே.நி) | 88256 50327 |
| 5. | திரு. தே. சரவணன், காட்சிக்கூட போதகர் | 99417 11029 |
| 6. | திரு. சீ. அருண்பிரசாத், NMR | 91766 52917 |
| 7. | செல்வி மு. ஹரிணீ, NMR | 77084 88203 |

தங்கள் உண்மையுள்ள

செயல் இயக்குநர் (முகூபொ)

CamScanner